Written by Administrator
Sunday, 12 July 2009 07:43 -

□□□□□□□□ **12.07.2009**

பிளாஸ்டிக் பொருட்கள் மறு சுழற்சிக்கான புதிய திட்டம் தயாரிக்கும் பணி தீவிரம்

பஞ்சேரி, ஜூலை 12-

புஞ்சேரி நெருக்கண்டி சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் பொருட்களை மறுசுழற்சி செய்வதற்கான திட்டத்தை புஞ்சேரி பிளாஸ்டிக் வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் சங்கம் தயாரித்து வருகிறது.

இதுகுறித்து சங்கத்தின் தலைவர் பாபு நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் ஜெயராம் ரமேஷுக்கு நன்றி தெரிவித்து எங்கள் சங்கத்தின் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மோக்பாவில் சுற்றுச்சூழல் தொடர்பாக அமைச்சர் ஜெயராம் ரமேஷ் பேசும்போது, பிளாஸ்டிக்கை தடை செய்வது என்பது மோசமான முடிவாகும். ஏனெனில் பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக பேப்பரை பயன்படுத்தினால் காடுகள் அழியும். இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கும்' என்று தெரிவித்துள்ளார்.

மேலும், அந்தந்த மாநிலத்தில் உள்ள நகராட்சிகள் இடக் கழிவு மேலாண்மையை மேம்படுத்தினால் பிளாஸ்டிக் குப்பைகளால் சாக்கடை அடைத்துக் கொள்ளும் பிரச்னைக்கு தீர்வு காண முடியும். பிளாஸ்டிக் பொருட்களை மறுசுழற்சி செய்யும் முறையை அமல்படுத்த வேண்டும்' என்றும் கூறியுள்ளார்.

மத்திய அமைச்சரின் கருத்து நாடு முழுவதிலும் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும் என்று எங்கள் சங்கம் நம்புகிறது.

புஞ்சேரியில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கும் முயலை வரவள் பெறுமாறு முதல்வரிடம் மனு அளித்தோம்.

அப்போது, அரசு சார்பில் இடம் தந்தால், அங்கு இயந்திரங்களை நிறுவி பிளாஸ்டிக் பொருட்களை மறுசுழற்சி செய்து பயன்படுத்துகிறோம் என்று ஆலோசனை தெரிவித்தோம்.

இரண்டு ஏக்கர் இடம் தருவதாக முதல்வர் தெரிவித்தார். மறுசுழற்சிக்கான திட்டத்தை நிரந்தரமாக தயாரித்து வருகிறோம். இதற்கு முன்னோட்டமாக அடுத்த மாதம் விராம்பட்டினத்தில் நடக்கும் தேர் திருவிழாவில் பிளாஸ்டிக் குப்பைகளை தனியாக பிரித்து மறு சுழற்சி செய்ய உள்ளோம்.

அப்போது, மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று பிரித்து குப்பைத் தொட்டியில் போடுவது குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் தங்கக் காகள் பரிசாக வழங்க உள்ளோம் என கூறினார்.